உ

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞூ ஆவணி மீ 26 ஆம் உ
( 1889 )

பிரதி விலை: 10 ரூபா
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சிவமயம் சாதனம்
## (HINDU ORGAN)

புத்தகம்: 110

பிரமாதி வருடம் மாசித் திங்கள் 07 ஆம் நாள்
( 19-02-2000 ) மாசிப் பூரணை

இதழ்: 11

### அகங்காரம் அகற்றி அன்போடு பக்தி செய்வார்க்கு அகப்படும்
### ஆதி அந்தமற்ற பரம்பொருள்
### இதை உணர்த்தும் சிறந்த சிவ விரதம்

# மகா சிவராத்திரி விரதம்

## திருக்கேதீச்சரத்தில் விசேட வழிபாட்டிற்கு ஏற்பாடு

**ஆதி அந்தமற்ற பரம் பொருள், அகங்காரம் ஒழிந்து அன்போடு பக்தி செய்வார்க்கு அகப்படுவார் என்பதை உணர்த்தி நிற்கும் மகாசிவராத்திரி விரதம் இவ்வாண்டு எதிர்வரும் மாசிமாதம் 21 ஆம் நாள் (04-03-2000) சனிக்கிழமை அமைகிறது.**

**சிவ விரதங்களுள் சிறந்த இவ்விரதத்தைப் பக்தி பூர்வமாக அனுட்டிக்கச் சைவாலயங்களும் சைவஸ்தாபனங்களும் பல ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.**

**இவ்வாண்டு திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி விரதம் அனுட்டிக்கப் பெரும் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், பக்தர்கள் ஆலயத்திற்குச் செல்ல இராணுவத்தினர் வசதிகள் செய்து கொடுக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.**

சிவராத்திரி தினத்தன்று பெரும் எண்ணிக்கையில் சிவனடியார்களை ஈர்த்து வந்த — தேவாரப் பதிகம் பெற்ற - திருக்கேதீச்சர ஆலயத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக சிவராத்திரி விரதம் முறையாக அனுட்டிக்கமுடியாதிருந்தது. சில வருடங்களில் ஒரு சிறு தொகை அடியார்கள் சென்று மட்டுப் படுத்தப்பட்ட வழிபாடுகள் செய்து திரும்பினர். இவ்வாண்டு அதிக

(13 ஆம் பக்கம் பார்க்க)

உ

### வைத்தீஸ்வரர் துதி

சந்த் ரார்த்த சூடம் சசிவர்ண தேகம்
பணாமணேர்ப் பூஷண பூஷிதாங்கம்
பாலாம்பிகாயா: பதிம் அக்நி நேத்ரம்
நமாமி வைத்யேச மகம் மகேசம்.

உ

### வைத்தியநாதர் பெருவிழா

நாவலர் பெருமான் காலத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் நிலைக்களனாக விளங்கிய வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் வருடாந்தப் பெருவிழா மார்ச் மாதம் இரண்டாம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. மார்ச் 11 இல் சந்திரசேகரப் பட்ட விழாவும், 17 இல் சப்பரத் திருவிழாவும், 19 இல் தேர்த் திருவிழாவும், 20 இல் பங்குனி உத்தரத் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் மகிமை

—சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம், B. A. அவர்கள்—

எட்டாம் அத்தியாயம் (தொடர்ச்சி)

## சனரஞ்சக சைவ சமயம்

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

அநேக சைவசமயிகள் விபூதி அணிகிறார்கள். ஆனால் பட்டணப்பகுதியிலுள்ள ஒரு சிலர் அதை அணிவதில் கரிசனை காட்டுவதில்லை. சிலர் விபூதியைத் தயாரிக்கும் அல்லது தேடிக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட ஆயத்தமாயில்லை. வேறுசிலர் அதற்கு சிறு பெறுமதி கொடுத்து தமது சைவரல்லாத மேலதிகாரிகள் முன் வெறும் நெற்றியுடன் செல்வதை விரும்புகின்றனர். சிறுவர்களும் சிறுமிகளும் தீட்சைபெற்றுக் கொள்ள வேண்டும் என்றொரு விதியிருந்த காலம் இருந்தது. இப்போது அது ஒரு விதிவிலக்காகிவிட்டது. தீட்சை பெறும் ஒரு சிலரும் பஞ்சாட்சர ஜபத்தை இயந்திரம் போலச் செய்கின்றனர். அல்லது ஜபம் செய்யாது விடுகின்றனர். வீபூதியை அணிவது பற்றியும் பஞ்சாட்சர ஜபம் பற்றியும் மக்கள் அலட்சியமாக இருப்பதற்கு அவற்றின் உயர் பெறுமதி பற்றிய அறியாமையே முழுக்காரணமாகும்.

இப்போ நாம் அவர்களது வழிபாட்டு முறைகளுக்கு வருவோம். சைவசமயத்தவர்களுள் பெரும்பான்மையினர் ஒவ்வொரு நாளும் தாம் விபூதி அணியும் ஒவ்வொரு தடவையும் இறைவனை நினைக்கிறார்கள். ஒரு சிலர் கோவிலுக்குத் தினமும் செல்கிறார்கள். நல்லதொரு எண்ணிக்கையினர் வாரமொருமுறை - திங்கட்கிழமைகளில் அல்லது வெள்ளிக்கிழமைகளில் - செல்கின்றார்கள். மற்றவர்கள் நிலைமைகள் தம்மை நெருக்கும்போது கோவிலுக்குச் செல்வர். குழந்தையொன்றுக்கு நோய் காணின் தந்தை அல்லது தாய் குழந்தையின் நோயைக் குணமாக்க வேண்டிக் கோயிலுக்குச் செல்வர். இந்த வேண்டுதல் பின்வரும் மூன்று வகைகளில் ஒன்றாக இருக்கும். 1) வேண்டுதல் மட்டுமாக இருக்கும். 2)வேண்டுதல் விசேடபூசை அல்லது அர்ச்சனை போன்றதொரு அன்பளிப்புடன் சேர்ந்ததாக இருக்கும் 3) பிரார்த்தனை நிறைவேறினால் அன்பளிப்புத் தருவது என்ற வாக்குறுதியுடன் சேர்ந்ததாக இருக்கும்.

இந்த வேண்டுதல்கள், அவை அனேகமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மேற்கொள்ளப்படுவன. ஆனால், தாம் கேட்பது சில சமயங்களில் கிடைக்கும், வேறு சில சமயங்களில் கிடைக்காது என்பது தமது சொந்த அனுபவங்களிலிருந்து ஒவ்வொருவருக்கும் தெரியும். அவர்களுக்குக் கேட்பது கிடைக்காதபோது, நல்ல வகை மக்கள் தமது கர்மம் தமக்கு அது கிடைப்பதை நியாயப்படுத்தவில்லை - எதனாலும் ''விதியை'' மாற்ற முடியாது - என்ற சிந்தனையுடன் தாமாகத் திருப்திப்பட்டுக்கொள்வர். ஏனையோர் வேண்டுதலைத் தராமைக்காகக் கடவுளை நிந்தித்து அவன் மீது வெறுப்பு அடைகின்றனர். உலகத் தேவைகளுக்காக இறைவனைப் பிரார்த்திக்கும் வழக்கத்திற்கு ஆதரவாகச் சில படித்த மக்கள் கூட அப்பர் சுவாமிகளின்

''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்''

என்ற வரியை மேற்கோள் காட்டுவதைக் கேட்கத் துன்பமாகவிருக்கிறது. ஆனால் அநேக சந்தர்ப்பங்களில் தாம் பிரார்த்தித்தவை கிடைப்பதில்லை என்பது அவர்களுக்கு தெரிந்திருத்தல் வேண்டும். இறை நம்பிக்கையற்றவர்கள் உட்பட முழு உலகமும் தாம் விரும்புவதில் அநேகமானவற்றை இறைவனிடம் வேண்டாதே பெற்றுக் கொள்கிறார்கள் என்பதை இவர்கள் அறிந்துள்ளார்கள். மேலாக, அப்பரது அடிகள் இவர்கள் அதற்குத் தரும் கருத்தைக் கொடுக்கவில்லை. இவ்வரி உண்மையில் என்னத்தைக் கருதுகிறது என நோக்கின் வழிபடுபவனுக்கு உண்மையாகத் தேவைப்படுவதும் அவனது ஆன்மீக முன்னேற்றத்துக்கு இறுதியில் உதவக் கூடியதுமான பொருட்களை மட்டுமே இறைவன் கொடுக்கிறான் என்பதாகும் (வேண்டுவதே = எது உண்மையில் தேவையோ அதனை மட்டும்).

ஒரு வைத்தியன், தனது நோயாளிக்கு ஏற்ற வகை உணவைக் கொடுக்குமாறு கட்டளையிடுவதன்றி, அவன் கேட்கக் கூடிய வேறு உணவைக் கொடுக்கக் கட்டளையிடுவதில்லை; அதுபோல வைத்திய நாதனாகிய இறைவன், ஆன்மாவானது ஆணவ நோயிலிருந்து குணமடைவதற்குத் தேவையான அதிகபட்ச உதவியைக் கொடுக்கத்தக்கதாக கர்ம விதியைப் பிரயோகிக்கிறார்.

வேண்டுதல்களைத் தருவதற்குப் பதிலாக இறைவனுக்கு அன்பளிப்புகளைக் கொடுப்பதானது இறைவனின் இலட்சணங்களை முழுப் பிழையாக விளங்கிக் கொண்டதை அடிப்படையாகக் கொண்டது. எல்லாவற்றிலும் முதலாவதாக, கடவுள் நிறைவானவர்; அவருக்குத் தேவைகளெதுவுமில்லை. ஆகவே அவரிடம் வேண்டுதல் செய்பவர்களின் அன்பளிப்புகள் அவருக்குத் தேவையானவைகளல்ல. இரண்டாவதாக, அவருக்கு விருப்பு வெறுப்புகள் இடையாது. ஆகவே அன்பளிப்புகள் அவரைச் சந்தோஷிப்பிக்காது, விசேட பூசை மூலம் இறைவனைப் பொய்த்துதி (முகஸ்துதி) செய்யலாமெனவும் அவருக்கு கொடுக்கப்பட வேண்டியவை கொடுக்கப்படாவிடின் அவர் அதிருப்தி அடைந்து தமக்குத் தீங்கு விளைவிப்பார் எனவும் இவர்கள் நினைக்கின்றனர். இவர்கள், கடவுளை மூன்றாந்தர மனிதருடைய நிலைக்குக் கீழிறக்கி விடுகின்றனர்.

இப்போ நாம் சில கோவில்களில் நடைபெறும் வருடாந்த மகோற்சவங்களுக்கு வருவோம். அநேக ஆலயங்களில் இது சரியான மனப்போக்குடன் கொண்டாடப்படுகிறது. இவ்விழாக்கள் கோவில் அமைந்துள்ள சுற்றாடலில் உள்ள மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைகிறது. ஆண்களும் பெண்களும் விழாக் காலத்தைப் புனிதமானதாகக் கொள்கின்றனர். மற்றைய நாட்களில் கோவிலுக்குச் செல்லாதவர்களும், விழா நாட்களில் வழிபடுவதைத் தவறவிடார். ஆனால் சில ஆலயங்கள் மகோற்சவத்தை நடத்துவதை நியாயப்படுத்துவதில்லை. இக்கோவில்களில் நடைபெறும் சில விழாக்களில், அந்தப் புனித இடமானது நரகத்தை விடக் கேவலமாக்கப்படு

( 3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் மகிமை

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. அவ்வாறான விழாக்கள் எமது சமயத்துக்கு இழுக்கைத் தருகிறது. அவை ஆலயங்களின் புனிதத் தன்மையை அழித்து அவ்விடத்தில் இறைவனது பிரசன்னத்தை இல்லாதொழித்து விடுகிறது. அவ்வாறான சமய விரோத விழாக்களை நடத்துபவர்களுக்கு தமது சமயம் பற்றிய அதிகுறைந்தளவு அறிவு தானும் கிடையாது. இறைவனது விக்கிரகத்தை விளையாட்டுப் பொம்மையிலிருந்து பிரித்தறிய முடியாதசுளவுக்கு அவர்களது அறியாமை அடர்த்தியானது.

இவற்றுள் மோசமான அக்கிரமம் எதுவெனில் விக்கிரகத்துக்குப் பொய்யான கைகளும் கால்களும் வைத்துக் கட்டுவதாகும். இதற்கு மிகவும் இறுக்கமானதும் பலமிக்கதுமான கட்டுக்கள் தேவைப்படும். இவ்வாறான கட்டுக்களைத் தனது உடம்பிற் கட்ட எந்தவொரு மனிதனும் அநுமதிக்க மாட்டான். அவ்வாறிருக்க இறைவனின் சொரூபத்தில் இவ்வாறான கட்டுக்களைப் போடுவதை அவன் எவ்வாறு நியாயப் படுத்தமுடியும்? அவ்விக்கிரகத்தைத் தன்னிலும் கீழ்மையான தொன்றாக - விளையாட்டுப் பொம்மை போன்று - கருதினால் மட்டுமே அவன் அவ்வாறு செய்ய முடியும். இறைவனை விளையாட்டுப் பொம்மையாகக் கொள்வதை விடக் கொடிய, பக்தியில்லாதவொன்றை உங்களால் நினைத்துப் பார்க்க முடியுமா? அப்படியிருந்தும் குருமாரும் ஆலய நிர்வாகிகளும் உபயகாரர்களும் இக்கொடுமையைக் கண்டு களிப்படைகிறார்கள்.

இம்மக்களின் இரண்டாவது கொடுமை சதுராடும் இளம் பெண்களைக் கோவில்களில் அறிமுகம் செய்தலாகும். விவேகமுள்ள மக்கள் தமது மனங்களைத் தூய்மைப்படுத்தக் கோவில்களுக்குச் செல்கிறார்கள். சதுராடும் பெண்கள் அவர்களது மனதைக் களங்கப் படுத்துகிறார்கள். மோசமானதென்னவெனில், சதுராடல் இல்லாத நாட்களில் ஒருசில டசின் மக்களே இறைவனது தரிசனத்துக்காகச் செல்லும் கோவில்களுக்கு, சதுராடும் பெண்களின் தரிசனம் பெற மக்கள் ஆயிரக்கணக்கில் திரள்கிறார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், இவ்விழாக்கள் இறைவனுக்குக் கொடுக்கும் மதிப்பைப் போல் நூறு மடங்கு மதிப்பை இச்சதுராடும் பெண்களுக்குக் கொடுக்கிறது. வேற்று மதத்தினரால் எமது சமயத்துக்கு எதிராகச் சுமத்தப் படும் குற்றச்சாட்டு என்னவெனில் நாம் இறைவன் மீது கொண்டுள்ள பக்தி, இப்பெண்கள் மீதான பக்தியிலும் மிகக் குறைவானது என்பதாகும். சைவசமயி ஒருவன் தனது சமயத்தைக் கைவிட்டு றோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியதற்கான ஒரேயொரு காரணம் எமது ஆலயங்கள் சதுராடும் பெண்களை அநுமதிப்பது மூலம் குற்றம் அதிகரிப்பதை ஊக்குவிக்கிறது என்பதாகும்.

இப்போ நாம் சாதாரண சைவசமயி ஒருவனை மோசம் செய்யும் ஒரு சில மூடநம்பிக்கைகளுக்கு வருவோம்: அநேக சைவசமயிகளுக்குப் பல்லி கீச்சிடுவது மிகவும் கரிசனைக்குரிய ஒரு விடயம், அது இரு வழிகளில் வியாக்கியானப்படுத்தப்படுகிறது. சிலர் பல்லி கீச்சிடுவதை எடுத்த காரியம் தோல்வியில் முடியும் என்பதற்கான எச்சரிக்கையாகக் கொள்கின்றனர். வேறு சிலர் பல்லி சொல் சாஸ்திரம் ஒன்றை வைத்துக் கொண்டு அதனால் வழிநடத்தப்படுகின்றனர். இதன்படி, பல்லியின் சில கீச்சிடுதல்கள் அனுகூலமானவை; ஏனையவை அனுகூலமற்றவை. மூன்று சாஸ்திரங்கள் உள்ளன. (ஒன்று எட்டுத்திக்குப் பலனையும் இன்னொன்று பதினாறு திக்குப் பலனையும் தருகிறது. மூன்றாவது கிரக நிலையுடன் சம்பந்தமுடையது). இவை பல சந்தர்ப்பங்களில் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டிருக்கும். அவை வேறுபடும் போது, குறைந்தது இரண்டு சாஸ்திரங்களாவது பிழையானவை என்பது பெறப்படும். உறுதிப்படுத்த விளையின், அவை எல்லாமே பிழையானதாகக் காணப்படலாம். இவற்றிற்கு மேலாக, எமது சாமானிய புத்தி, பல்லி கீச்சிடுதல் எமக்குத் தொடர்புடைய விடயங்களுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்பதைக் கூறவேண்டும்.

இதற்கு அடுத்து வருவது சோதிடம். இதுவும் மூன்று வெவ்வேறு அடிப்படைகளைக் கொண்டது. (இவற்றில் இரண்டில் சூரியனுதிக்கும் இராசியே ஆரம்ப இடமாகும். ஆனால் மூன்றாவதில் எப்போதும் மேட இராசியே ஆரம்ப இடம். முன்னையவிரண்டில் ஒன்று கோள்களின் கோணத் தூரங்களை வலஞ்சுழியாகவும் மற்றயது இடஞ்சுழியாகவும் அளவிடுகிறது).

ஒரு அடிப்படையில் எதிர்வு கூறப்படுபவை மற்றயவற்றின் அடிப்படையில் எதிர்வு கூறப்படுபவற்றுடன் முரண்படுவதைச் சுலபமாகக் காணலாம். ஆகவே இம் மூன்று தொகுதிகளில் குறைந்தது இரண்டாகுதல் உண்மையற்றதாதல் வேண்டும். அனுபவமானது மூன்றாவதும் பிழையானது என்பதைக் காட்டும். சோதிடத்தின் மிகவும் கவர்ச்சியற்ற கொள்கை யாதெனில் ஒருவனது பிறப்பின் போது கோளொன்று அனுகூலமற்றிருந்தால், அது அவனைப் பிறப்பிலிருந்து பல தசாப்தங்களுக்கு - அதன் தசாபுத்தியின் போது - துண்டாடிக் கொண்டிருக்கும் என்பதாகும்.

சோதிடம் உண்மையாக இருப்பினும், அதனை நம்புவதால் ஏற்படும் நிகர விளைவு துன்பமே. ஒரு எதிர்வு கூறல் அனுகூலமுடையதாக அல்லது அனுகூலமற்றதாக விருக்கலாம். சோதிடன் ஒருவன் ஒருவனைப் பார்த்து உனது மகன் இன்னும் மூன்று வருடங்களில் அரசாங்க சேவையில் மிகவுயர்ந்த பதவி யொன்றைப் பெறுவான் என்று கூறுகிறான். அந்த மனிதன் சந்தோஷமடைகிறான். ஆனால் அந்தச் சந்தோஷம் மெதுவாக மங்குகிறது. அந்தச் சோதிடர் அவனுக்கு அவனது மகன் மூன்று வருடங்களில் இறந்து போவான் என்று கூறுவதாக இருக்கட்டும். அவனது துன்பம், உயர்நிய மனம் ஒன்று கிடைக்கும் என்பதைக் கேட்ட போதிருந்த சந்தோஷத்தைப் போல் நூறு மடங்கு அதிகமானது. இத் துன்பம் வரவர அதிகரித்துக் கொண்டு செல்லும். அவனும் அவனது மனைவியும் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் மனமடிவடைவர். அவர்கள் நோய்க்கு இரையாகின்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் மகிமை

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றனர். நாம் அனுகூலமான எதிர்வு கூறலின் விளைவுடன் சேர்த்து நோக்கினோமாகில், எதிர்வு கூறல்களின் மொத்த விளைவு துன்பம் என்பதையும் சோதிடம் ஒரு பறிகாரன் என்பதையும் இலகுவில் காணலாம். சோதிடம் வானியலின் குழந்தையென்ற அங்கீகாரத்தைப் பெறுவதாகக் கோரப்படுகின்றது. ஆனால் அது அந்தச் சிறந்த விஞ்ஞானத்தின் சட்டபூர்வக் குழந்தை என்பதைக் காட்டக்கூடிய எதுவும் இல்லை.

இன்னொரு மூடநம்பிக்கை சூன்யம் பற்றியது. இதில் மந்திரவாதி ஒருவர் ஒரு குறிப்பிட்ட நபருக்குத் தீங்கு விளைவிக்க ஒரு பிசாசை ஏவி விடுவதாகச் சொல்லப்படும். அந்த நபர் இடையிடையே தனது தலையை உலுப்புவார்; சில சமயங்களில் ஒதுங்கி இருப்பார். இவை உண்மையில், அவரது உறவினருக்கோ அல்லது உள்ளூர் வைத்தியருக்கோ பரிச்சயமில்லாத ஒரு சுகக்குறைவினால் ஏற்படுவது. அவர் பொருத்தமான வைத்திய சிகிச்சையைப் பெற்றால் குணமாவார். (எனது பழைய மாணவனொருவனுக்கு இவ்வாறான பிரச்சனை இருந்தது. அவனை வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தச் செய்வதில் நான் வெற்றி கண்டேன். அவன் தனது நோயிலிருந்து குணமடைந்து ஒரு அரசாங்க நிலவளவையாளனாக உயர்ந்து போதியளவு செல்வத்தையும் சம்பாதித்துக் கொண்டான். இவ்வளவு செல்வத்தையும் என்ன செய்வதென்று தெரியவில்லை என்று அவன் என்னிடம் ஒரு நாள் கூறினான்.)

ஜனரஞ்சக சைவசமயம் ஒழிய வேண்டும். சமயக் கல்வி வளர வேண்டும். அது இளைஞரையும் முதியவரையும் சென்றடைய வேண்டும். அது சைவப் பாடசாலைகளிலும் அரசாங்கப் பாடசாலைகளிலும் கல்வி கற்கும் அதிர்ஷ்டமுள்ள இளம் வயதினரைச் சுலபமாகச் சென்றடையும். அன்னிய மத நம்பிக்கைப் பாடசாலைகளில் கல்வி பயிலும் சைவக் குழந்தைகளுக்குச் சைவ ஸ்தாபனங்கள் சமய அறிவு ஊட்டவேண்டும். சைவஸ்தாபனங்கள் வளர்ந்தவர்களுக்கும் சமய ஒளியை எடுத்துச் செல்லும் வழி முறைகளைக் காண வேண்டும். அவ்வாறாயின் மட்டுமே சைவசமயம் தனது எல்லா மேன்மைகளுடனும் ஒளிரும்.

(முற்றும்)

## பண்ணிசைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் புண்ணியநாச்சி அம்மையார் நினைவாக 06-02-2000 ஆம் திகதி வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள் கீழே தரப்படுகிறது. முதலாவது பரிசாகத் தங்கப் பதக்கமும் இரண்டாவது பரிசாக வெள்ளிப் பதக்கமும் மூன்றாவது பரிசாக வெண்கலப் பதக்கமும் வழங்கப்படவிருக்கிறது. 19-02-2000 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு சைவபரிபாலன சபையாரின் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் புண்ணியநாச்சி அம்மையார் நினைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் திரு. க. சந்திரசேகர அவர்களால் பரிசில்கள் வழங்கப்படும்.

### கீழ்ப்பிரிவு:-

| | | | |
|---|---|---|---|
| 01. | செல்வி பவனுஜா தெய்வேந்திரன் | யா/ மானிப்பாய் சோதிவேம்படி வித்தி | 1ம் பரிசு |
| 02. | செல்வி ப்பிறுகஸ்வினி ச. | யா/ இந்து ஆரம்ப பாடசாலை | 2ம் பரிசு |
| 03. | செல்வன் தேவராசா விதுர்சன் | யா/ கொக்குவில் இ. ஆ. பாடசாலை | 3ம் பரிசு |

### மத்தியபிரிவு:-

| | | | |
|---|---|---|---|
| 01. | செல்வன் குலேந்திரன் ஜெகதீசன் | யா/ யூனியன் கல்லூரி | 1ம் பரிசு |
| 02. | செல்வன் அழகேசன் அமிர்தலோஜனன் | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | 2ம் பரிசு |
| 03. | செல்வி துஷ்யந்தினி துரைராஜசிங்கம் | யா/ இராமநாதன் கல்லூரி | 3ம் பரிசு |

### மேற்பிரிவு:-

| | | | |
|---|---|---|---|
| 01. | செல்வி ந. தனசொரூபி | யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | 1ம் பரிசு |
| 02. | செல்வன் லக்மன் சத்தியமூர்த்தி | யா/ யூனியன் கல்லூரி | 2ம் பரிசு |
| 03. | செல்வன் பு. நாகரஞ்சன் | யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை | 3ம் பரிசு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை சைவம் வளர்த்த சான்றோர்கள் - (1):

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்

— பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் —

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்திருநாட்டில் தோன்றித் தமிழ்நாடறியச் செந்தமிழ் வளர்த்த செம்மல்களும், சைவம் வளர்த்த சான்றோர்களும் பெருந்தொண்டு புரிந்தார்கள்.

சைவம் வளர்த்த சான்றோர் வரிசை பெரிது. அந்த வரிசையறிதலும் கடினம். முன்னர் பதினேழாம் நூற்றாண்டில்-1650ஆம் ஆண்டளவில் கௌடதேயம் என்னும் வங்காளம் அறிய மங்காத சைவப் பெரும்பணி புரிந்தவர் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி ஊரினராய ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள். அவர் செய்தருளிய பெரும்பணியளவில் இன்னொருவர் இதுவரை சைவத்துக்குச் செய்யவில்லை. அவர் வடமொழியிலும் செந்தமிழிலும் மிகு சைவத்துறை விளங்கச் செய்தவற்றைப் பிரான்ஸ் தேசத்துப் பாரிஸ் மாநகரப் பல்கலைக் கழகத்தார் ஆய்ந்து நயந்துள்ளார்கள்.

அவர் வழியில் வந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மாணாக்கர், நண்பர் பாரம்பரியத்தில் வந்த சைவப் பெரியார்கள் வரிசை பெரிது. அவர்களுள் கந்தமடம் சின்னத்தம்பி சுவாமிநாதன் என்பாரும் ஒருவர்.

கந்தமடத்தில் தரகன் சின்னத்தம்பி என்பார் சின்னாச்சி என்பாரை மணந்து 1880ஆம் ஆண்டளவிற் பெற்ற மைந்தன் தம்பையா என்னும் சுவாமிநாதன். இவர் மடத்துப் பள்ளிக்கூடம் எனவழங்கிய கந்தமடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்ப வகுப்புகள் பயின்றபின் வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் மேற்படிப்புப் படித்தவர். அங்கே நாவலர் அவர்களின் பெருமையை நன்கறிந்து தாமும் அவரைப் போல நைட்டிகப் பிரமசாரியாய் வாழ்ந்து தொண்டு செய்தல் வேண்டும் எனத்தீர்மானித்தவர்.

செல்வத்தாற் குறைவில்லாத தந்தையார், தம் மைந்தன் படித்தாற்போதும் என நிறைவு கண்டவர். அவருக்குச் செவிப்புலன் குறைவாக இருந்தமையால் மைந்தன் அவரோடு உரத்துப்பேசிப் பழகி வந்தார். அப்பயிற்சி அவருக்கு ஒரு வரப்பிரசாதமாய் அமையலாயிற்று.

கந்தமடத்தில் வைரவநாதர் சின்னத்தம்பி என்பாரும் அவர் தம்பியார் முகத்தார் என்னும் ஆறுமுகம் பிள்ளையும் பெரும் படிப்பாளிகள், தொழிலதிபர்கள். நாவலர் அவர்களைத் தெய்வமாகக் கருதி வீழ்ந்து வணங்கி வந்தவர்கள். நாவலரவர்கள் சொன்ன வண்ணம் கோயிற்பணிகள், சமூகப்பணிகள் செய்தவர்கள். சின்னத்தம்பியாருக்குச் சிவகுருநாதன் என்றொரு மைந்தன்.

சிவகுருநாதனுக்குத் தமிழ் கற்பிப்பதற்கு வித்துவசிரோமணி வந்துபோதல் வழக்கம். சின்னத்தம்பியார் வீட்டில் உபசரிப்பு உச்சமாயிருந்தது. மைந்தன் சிவகுருநாதனோடு அருகிருந்து படித்து ஊக்கம் அளிப்பதற்குச் சிவகுருநாதனின் மைத்துனன் கதிரவேலு சின்னையா என்பாரும், அயலவரான சின்னத்தம்பி சுவாமிநாதன் என்பாரும் சேர்ந்தார்கள். மூவருள்ளும் சுவாமிநாதன் உச்சநிலை. வித்துவசிரோமணி அவர்களின் உள்ளங்குளிரும் வகையில் அவருக்குக் கற்பித்தார். அவரும் வித்துவசிரோமணி அவர்களை விடாது நிழல்போலத் தொடரத் தொடங்கினார். வித்துவசிரோமணியிடம் கற்கக்கூடியவற்றை விவேகத்தோடும் ஊக்கத்தோடும் கற்று வந்தார்.

வித்துவசிரோமணி ஒருசமயம் சுகவீனமுற்றிருந்தபோது, அவர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரை அழைத்துத் தமக்காகப் பாடம் நடத்தச் செய்தார். சிவசம்புப் புலவர் மெச்சும் வகையில் சுவாமிநாதனே நன்றாகப் படித்தார். சிவசம்புப் புலவர் தாம் கண்ட மாணாக்கருள் சுவாமிநாதனைப் போல வேறொருவரைக் காணவில்லை என்று வித்துவசிரோமணியிடம் கூறினார்.

சுவாமிநாதன் உச்சமாகப் படித்தபின் வேதனம் பெறாமல் ஆசிரியர் வேலை பார்த்தார். தம்பையா உபாத்தியார் என்றே அவர் வழங்கப்பட்டார். அவர் அயலில் உள்ளவர்களிடம் பிள்ளைகளுக்குத் தெய்வங்களின் பெயர்களையே வைக்குமாறு வற்புறுத்தி வந்தார். அந்த வகையில் வடிவேல், உமாபதி, தெட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தர் முதலிய பெயர்கள் ஊரில் ஒலித்தன. தாமிருந்த வளவின் அருகில் ஞானவைரவர் கோயிலமைத்து நித்தியபூசைகளோடு சைவசமய விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் யாவும் நடைபெற ஒழுங்கு செய்தார்.

பண்டிதர் அவர்களுடைய உரத்த, கனிந்த, பண்ணமைந்த குரல், புராணபடனத்துக்குப் பெருவிருந்தாயிருப்பக் கண்ட வித்துவசிரோமணி அவர்கள், இவரையே தாம் பயன் சொல்லப் போகுமிடமெல்லாம் அழைத்துச் சென்று, தமது பன்முகவறிவு சார்ந்த பயன் விசேட நயங்களையெல்லாம் பருகச் செய்தார். இத்தகைய பயிற்சி விசேடம் பண்டிதர் அவர்களுக்குப் பிரசங்க மாரியின் போது முத்துமுத்தாய்ச் சொரியப் பெருவாய்ப்பாயிருந்தது. அன்றித் தம் குருநாதன் குரலிலும் இனிமையாகப் பேச அவர் பழகியிருந்தார். இங்ஙனமாக அவர் ஒரு சமயம் எங்கேயோ பேசியபோது, கேட்டுக்கொண்டிருந்த வித்துவசிரோமணி அவர்கள் கண்ணீர் வடித்தார் என்ப.

சுவாமிநாதனின் அறிவாற்றல், விவேகம், சகலாகம பயிற்சியாதியவற்றைக் கண்ட வித்துவசிரோமணியும் சிவசம்புப் புலவரும் தங்கள் மாணாக்கனைச் 'சாமிநாத பண்டிதன்' எனவே வழங்கி வந்தார்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

‘சிவானந்த லஹரி’யிலிருந்து சில ஆனந்தத் துளிகள்:

# சிவானந்த வெள்ளம்

— யோகேஸ்வரி சிவப்பிரகாசம் —

‘சிவானந்த லஹரி’ என்னும் வடமொழியிலமைந்த சிவஸ்தோத்திரம் ஆதிசங்கரர் அருளியதாகும். இதை இயற்றியவர் யார் என்பது பற்றிய கருத்து வேறுபாடு களுமுண்டு. நாம் அதை விடுத்து, நூறு சுலோகங்களைக் கொண்ட அந்தத் தலை சிறந்த ஸ்தோத்திரங்கள் கூறும் ஆன்ம ஈடேற்றத்திற்கான பக்திமயமான விடயங்களை மட்டும் பார்க்கலாம்.

பக்தி இச்சுலோகங்களில் பல்வேறு வகைகளில் சிறப் புறக் கூறப்படுகிறது. பக்தி சாஸ்திரத்திற்கு லக்ஷணக் கிரந்தமாக சிவானந்தலஹரி அமைந்துள்ளதாகப் பெரி யோர்கள் கூறுவர்.

‘சிவானந்த லஹரி’ என்றால் சிவானந்தக்கடல் என்று பொருள்படும். அந்தக் கடல் முழுவதையும் அளக் கும் திறனோ, அதன் சுவையை முழுமையாக விளக் கும் திறனோ, அடியேனுக்குக் கிடையாது.

அங்குமிங்குமாக ஓரிரு துளிகளை மாதிரிக்கு எடுத் துச் சுவைத்து எம் பிறவிப்பிணியைத் தீர்க்க முயலலாம். தமிழ்ப்பாடல்களை விளக்குவதே கடினமாக உள்ள போது, வடமொழிச் சுலோகங்களை விளக்குவது சுலப மல்ல! எனினும் இயன்றவரை முயற்சிப்பதே எம் நோக் கமாகும்.

சிவானந்த லஹரியின் இரண்டாவது சுலோகத்தினை முதலிலே எடுத்துக் கொள்வோம்.

**கலந்தீ சம்போ த்வச்சரித - ஸரித கில்பிஷர ஜோ**
**தலந்தீ தீகுல்யாஸரணிஷு பதந்தீ விஜயதாம்!**
**திசந்தீ ஸம்ஸாரப்ரமண - பரிதாபோபசமனம்**
**வஸந்தீ மச்சேதோ – ஹ்ரதபுவி சிவானந்த லஹரி!!**

‘‘சம்புவே, தங்களிலிருந்து ஓடிவரும் நதியாகப் பிரவகிப்பதும், பாவமாகிய புழுதியை நீக்குவதும் புத்தி யாகிய கால்வாய்களில் பாய்கின்றதும், உலக வாழ்வில் உண்டாகும் பெரிய துன்பத்திற்குச் சாந்தி யளிப்பதும், எனது சித்தமாகிய தாழ்நிலத்தில் வந்திருப் பதுமாகிய சிவானந்தக் கடல், வெற்றி பெறுவதாக’’ என்பது இச்சுலோகத்தின் பொருளாகும்.

இறைவனிலிருந்து பிரவகிக்கும் சிவானந்தப் பெருக்கு, பக்தனின் மனதில் வந்து தேங்கி, சம்சார துன்பத்தை நீக்கிச் சாந்தி தருவதை இச்சுலோகம் மிக அழகாகக் கூறுகிறது.

சாதாரண நதி நம் உடலழுக்கைக் கழுவி விடும். இந்தச் சிவானந்த லஹரியோ பாவமாகிய புழுதி அழுக் கைக் கழுவுகின்றது. நாளும் பொழுதும் நாம் செய்யும் பாவங்கள் கணக்கிலடங்கா. மனதைத் தெளியவைத்து, அதில் ஒரு முறை நம்மை நாம் பார்த்துக் கொண்டால், எம்மில் அப்பிக்கிடக்கும் பாவப்புழுதி புலப்படும். இந்தக் கடல் அந்த அழுக்கை அகற்றித் தூய்மையாக்குகிறது. ‘நெஞ்சில் வஞ்சங்கெடச் செய்யும் பேராறு’ பற்றி சிவ புராணங்கூடக் கூறுகிறது.

‘‘பந்தம் அறுக்கும் ஆனந்த மாகடலே’’ என்று கோயிற்றிருப்பதிகத்திலும் மாணிக்கவாசக சுவாமிகள் பாடுகின்றார்.

‘‘இவை பாவம், இவை மாயை’’ என்றெல்லாம் பாவம், பவம் ஆகிய இரண்டும் பற்றி எத்தனையோ பெரியோர் எவ்வளவோ கூறியும், நாமே அனுபவித்து நிலையாமையை நிதர்சனமாகக் கண்டும், எம்மனம் பற்றறுத்துவிட்டதா? இல்லையே! எத்தனை இடம் பெயர்வுகள், இழப்புகள் எல்லாவற்றையும் நாமே சந் தித்துவிட்டோம். நித்தம் நித்தம் மரணங்களைக் கண் ணெதிரே காண்கிறோம். அவற்றால் எம்பற்றை அறுத் தெறிய முடியவில்லையே, அதனைச் சாதிக்க இந்தச் சிவானந்த வெள்ளத்தால் மட்டுமே முடியும். சம்சாரக் கடலில் நாம்படும் துன்பங்களுக்கு எல்லையுண்டா? இல்லையென்று தான் நாம் சொல்வோம்.

**‘‘தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்**
**தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றி**
**கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்**
**கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு ..’’**

என்று திருச்சதகம் பிறவிப் பெருந்துன்பத்தின் அல்லலைச் சொல்லும்.

இந்த சிவானந்த லஹரி பரம்பொருளில் ஊற்றெ டுத்து எம் சித்தத்தின் வழியே வந்து மனதிலே தங்கும் போது இந்தப் பிறவித்துன்பம் அற்றுப்போய் சாந்தியேற் படுகிறது.

இந்த சிவானந்த வெள்ளத்தை அனுபவித்து சிவானந்த லஹரியில் பல்வேறு இடங்களில் சுவாமிகள் விளக்குகின்றார்.

**ஸதா த்வத் பாதாப் ஜ ஸ்மரண பரமானந்த லஹரி**

என பத்தாவது சுலோகத்தில் கூறுவதை உதாரண மாகக் கொள்ளலாம். எந்நேரமும் உனது பாதங்களை நினைக்கும் பரமானந்தப் பெருக்கு எனக்கூறுகின்றார். ஆம், அந்த சிவானந்தம் பரமானந்தமானது. அது பரம்பொருளின் பாதங்களைத் தியானிக்கும்போதே நம்மைப் பரமானந்தங்கொள்ளச் செய்கிறது. ஆனந்தத் திற்கும் மேலாக மிகப் பெரும் ஆனந்தத்தை - பரமா னந்தத்தைத் - தருகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசௌச விளக்கம்

தொகுத்து எழுதியவர்: திரு. ஆ. சபாரத்தினம் அவர்கள்

**''சம்ஸ்கார பராமரிசம் உண்மை யானும்
அதன் இன்மை கூறப்பட லானும்''**

—பிரமசூத்திரம் 101 (1.3.36)

**''புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்''**

—திருக்குறள். 298.

முனிமொழி என ஔவையார் பாராட்டிய பிரம சூத்திரம் சம்ஸ்காரங்கள் மூலமே ஒருவன் ஞானம் பெறத்தக்க பக்குவம் பெறுவான் என்பதை வலியுறுத்துகிறது தரும சாத்திரங்களிலே நாற்பது சம்ஸ்காரங்கள் பேசப்படுகின்றன. சைவ ஆகமங்கள் அவற்றுள் பதினாறை வலியுறுத்தும். (சம்ஸ்+காரம் = தூய்மைப்படுத்தும் கிரியை).

அவை ஏன்? ஆன்மீக வாழ்வுக்கு உயிர்நாடியான அவை இன்றைய லௌகிகப் போக்குக்கு வேண்டியவை தாமா? இவ்வித ஐயவினாக்கள் சைவ மக்களிடையே எழுகின்றன. இளைஞர்கள் ''நாங்கள் இவற்றைப் 'பரவாய்' செய்வதில்லை; அம்மா குளியாமல் வீட்டுக்குள் விடார்'' என்கிறார்கள். முக்கியமாக மரண வீட்டுக்குச் சென்று வருவோர் தூய்மை செய்யப்படுவது அவசியம் என்று பழமை பேணுவோர் கருதுகிறார்கள். 'இது விஞ்ஞான அடிப்படையில் தோன்றியது' என்று விளக்கம் அளித்துத் திருப்தியடைகிறார்கள். சுகாதார பரமான தூய்மைக்கும், கிரியா பரமான தூய்மைக்கும் வேறுபாடு உண்டு என்பதை அவர்கள் உணர்வதில்லை. இருவேறு திசையில் போகும் நாகரிகங்களின் மோதுதலில் சிக்கித் தவிப்பவர்களின் சந்தேகங்களைப் போக்கி 'துவந்துவங்கள் தூய்மை செய்'வதே இத்தொகுப்பின் நோக்கம்.

சைவசமயிகளிடையே கோவிலுக்குப் போதல், விவாகம் போன்ற நற்கருமங்களின் போது, 'எனக்கு ஆசூசம்' என்ற பேச்சு இடம்பெறும். அதை எதிர்த்தும், விஞ்ஞான விளக்கம் கொடுத்து ஆதரித்தும் பேசுவோர் அதிகம். ஆசௌசம் என்ற சொல் திரிந்து பேச்சு வழக்கில் ஆசூசம் என்று ஆயிற்று.

'சுசி' என்றால் சுத்தம். சௌசம் சுத்தம் உடையது. அசுசி = அழுக்கு; ஆசௌசம் (கிரியாபரமான) சுத்தம் இன்மை. ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரியைகளைச் செய்கிறவனுக்கு, அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற்செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். தீட்டு, தொடக்கு என்றசொற்களும் மக்கள் பேச்சில் வரும். தொடக்கை நீக்கிய பின்னரே நற்காரியங்கள் செய்யலாம். இல்லாவிட்டால். உளரீதியான ஓர் அருவருப்பு உள்ளே இருந்து கொண்டே இருக்கும். மனம் ஆன்மீக நற்கருமத்தில் படியாது.

அசுத்தியை (அழுக்கை)ப் போக்க
1) காலம்
2) ஸ்நானம் (நீராடல்)
3) காலம், ஸ்நானம் இரண்டும்
ஆக மூன்று வழிகள் இருக்கின்றன.

1) ஊரில் ஒரு இறப்பு நிகழ்கிறது. அழுகை, மேள ஒலி, ஒலிபெருக்கி மூலம் மரணம் பற்றி ஊரார் அறிகின்றனர். கோவிற் பூசை நிறுத்தப்படும். சற்காரியங்கள் நடைபெறா. ஊர்த்தொடக்கு பிரேதம் ஊருக்குள் இருக்கும் காலம் வரை அவ்வூர் மக்களைப் பீடிக்கும். பிரேதம் ஊரிலிருந்து அகற்றப்பட்டதும் தொடக்கு நீங்கிவிடும்.

2) இறப்பு நிகழ்ந்த வீட்டுக்குச் சென்று, மரணச் சடங்குகளில் பங்கு பற்றிய அயலவர், உறவினரின் ஆசௌசம் ஸ்நானத்தால் நீங்கும்.

3) இரத்த உரித்துக்காரர் (ஆண்வழி) ஆகிய தொடக்குக் காப்போர் உறவு பற்றி, மனத்தில் துக்கம் நிலைத்திருக்கும். இறந்தோரை நினைத்து இடையில் அழுகை வரலாம். துன்பம் தோய்ந்த உள்ளத்துடன் ஆன்மீக முயற்சிகளில் ஈடுபட முடியாது. அதனால் ஒரு குறித்த கால எல்லை வைத்து அதன்முடிவில் நீராடி, ஆசௌசத்தை நீக்கலாம். இங்கு காலம், ஸ்நானம் ஆகிய இரண்டும் வேண்டியதாகிறது.

ஆசௌசம் பத்துவகையாக ஏற்படலாம்:

1) பிறப்பு, 2) இறப்பு, 3) சுடுதல், 4) பிரேதத்துக்குப் பின்னே செல்லல், 5) காவுதல், 6) அழுதல், 7) ஆசௌசிகளிடம் சாப்பிடுதல், 8) கலத்தல், 9) குறித்த கால எல்லையில் தலைமயிரை அகற்றாமை (மயிர் முழுவதையும் களைதல் ஆசௌச நீக்கத்தின் பொருட்டு இன்றும் பல கிராமங்களில் வழக்கம்) 10) இறந்தவருடைய உரிமைக்காரர் (மகன், அல்லது கொள்ளி வைத்தவர்) இறந்தவரது பிரேதத்தன்மையை நீக்கி விடும் கிரியை ஆகிய சபிண்டீகரணம் செய்யாமை.

*பிறப்பு:*

ஒரு வீட்டில் குழந்தை பிறத்தல் தொடர்பாக உண்டாகும் தொடக்கு நான்கு வகையானது:

1) கருச்சிதைவு நான்கு மாதத்துக்குள் நிகழ்தல்.

2) 5ஆம் 6ஆம் மாதங்களில் நிகழ்தல்;

3) 7 ஆம் 8 ஆம் 9 ஆம் மாதங்களில் நிகழ்தல்;

4) பத்தாம் மாதத் தொடக்கத்தில் நிகழும் இயற்கையான பிறப்பு.

முதலிரு நிகழ்ச்சிகளிலும் எத்தனைமாதச் சிசு வெளிப்பட்டதோ அத்தனை நாட்கள் தொடக்கு. உதாரணம் 6 ஆம் மாதத்தில் கருச்சிதைந்தால் 6 நாள் தொடக்கு. அதன்பிறகு நிகழ்ந்தால், இயற்கையாகக் குழந்தை பிறக்கும்போது தொடக்குக்காக்கும் நாள் அளவு.

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

பிரமாதி ஸ்ரீ மாசி மீ 07 உ (19-02-2000)


# சிவராத்திரி சிந்தனைகள்

மகாசிவராத்திரி என்றால் சிவனை வழிபடுவதற்கு மிகச் சிறந்த இரவு எனப் பொருள்படுகிறது. அவ்விரவு முழுவதும்-சிறப்பாக நடுநிசியில்- இலிங்கோற்பவ காலத்தில்-சிவலிங்கப் பெருமானை அபிடேகித்து அருச்சித்து வணங்குவது மிகுந்த பலன் தரும் எனச் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

பரமசிவனது அறுபத்து நான்கு மூர்த்தங்களுள் ஒன்றாகிய இலிங்கோற்பவ மூர்த்தியே இலிங்கோற்பவ காலத்தில் வழிபடுதற்குரிய மூர்த்தமாகும். கர்ப்பக்கிரகத்தின் சுவரில் மேற்குப் பக்கத்தில் - கர்ப்பக்கிரகத்தின் உள்ளேயுள்ள சிவலிங்கத்திற்குப் பின்புறமாக- இலிங்கோற்பவ மூர்த்தியின் பிம்பம் இருக்கும். அதில் இலிங்கத்துள் ஒரு திவ்ய மூர்த்தி இருக்கும். அதன் சடாமுடி இலிங்க வட்டத்துள் அடங்காமல் இருக்கும். அதன் பாதம் இலிங்கத்தின் அடியில் காணக்கூடியதாகவிராது. இந்த மூர்த்திக்குக் கீழே ஒரு பன்றி வடிவத்தில் மூர்த்தியொன்று இருக்கும். மேலே அன்ன வடிவில் இன்னுமோர் மூர்த்தி இருக்கும். இதுவே இலிங்கோற்பவ மூர்த்தியின் அமைப்பு. இந்த மூர்த்தம் எமக்கு என்ன சிந்தனைகளைத் தோற்றுவிக்கிறது?

முழுப் பிரபஞ்சமுமே சிவலிங்கம் தான். இப்பிரபஞ்சத்திலுள்ள சகல பதார்த்தங்களும்-நல்லது கெட்டது எல்லாமே - சிவ சொரூபம் தான் என்று ஸ்ரீருத்ரம் கூறுகிறது.

சிவலிங்கம் வட்ட வடிவமாயிருக்கிறது. வட்டத்துக்கு அடியும் இல்லை; முடியும் இல்லை. அதுபோல் ஆதியந்தம் அற்றபொருள் சிவம் என்பதைச் சிவலிங்கம் உணர்த்துகிறது. சரியான வட்டமில்லாது முப்பரிமாண நீள் வட்டமாக இருக்கிறது. கோள்களின் ஒழுக்குகளும் சரியான வட்டமாகவன்றி நீள் வட்டமாகத்தானே இருக்கிறது.

தூரவிடத்தில் உள்ள உறவினர் ஒருவர் எம்முடன் தொலைபேசியில் பேசுகிறார். அவர் அதில் சந்தோஷம் காண்கிறார். ஆனால் முழுத் திருப்தி அடைவதில்லை. நேரடியாக எமது உருவத்தைப் பார்த்தால் தான் திருப்தி என்ற நிலையில் எமது உருவத்தை நேரடியாகப் பார்க்க வருகிறார். அவ்வாறே உருவமற்ற சிவனும் ஒரு உருவத்தோடு வந்து அனுக்கிரகம் செய்யும் போது எமக்குத் திருப்தி ஏற்படுகிறது. உருமற்ற (அருவ) உண்மை, ஞானிகளுக்கே புரியும். உருவத்தைப் பார்த்துப் பார்த்து மகிழும் எமக்குச் சிவனை உருவத்தோடு கண்டால் தான் ஆனந்தம் உண்டாகிறது. அதற்காகத் தான் உருவமற்ற பரமசிவன், அருவுருவமான இலிங்கமானதோடு நில்லாமல், அந்த இலிங்கத்துக்குள்ளேயே திவ்வியரூபம் காட்டும் இலிங்கோற்பவ மூர்த்தியாகக் காட்சி தருகிறார். இவ்வாறு ரூபத்தைக் காட்டிய போதும், உண்மையில் தாம் அடிமுடியற்ற - ஆதியந்தம் அற்ற- ஆனந்த வடிவு என்பதை உணர்த்த எல்லையற்ற சோதி சொரூபமாக நிற்கிறார். இவ்வாறு சோதி லிங்கமாக உற்பவித்த இரவே சிவராத்திரி.

இலிங்கோற்பவ மூர்த்தியின் காட்சி, பரம்பொருளது அருவ, அருவுருவ, உருவ நிலைகளையும் ஆதியந்தமற்ற தன்மையையும் எமது சிந்தனைக்குக் கொண்டு வருகிறது.

விஷ்ணுவும் பிரமாவும் பன்றியாகவும் அன்னமாகவும் உருவெடுத்து அடிமுடி தேடிய வரலாறு யாவரும் அறிந்தது. இவ்வரலாற்றின் தாற்பரியம் பரம்பொருள் ஆதியந்தமற்ற - சிருஷ்டி (பிரமனது தொழில்), பரிபாலனம் (விஷ்ணுவின் தொழில்) எல்லாவற்றையும் கடந்த - பொருள் என்பதாகும். இவ்வாறு ஆதியந்தமற்ற பொருளை 'எனது சாமர்த்தியத்தால் அறிய முடியும்' என்ற அகங்காரத்துடன் தேடினால் காணவே முடியாது என்பதுவே இக்கதையின் மிகமுக்கிய பாடம். அகங்காரமில்லாது அன்போடு பக்தி செய்து உருகினால் பரம்பொருள் எமக்கு அகப்பட்டு விடுவார். ''நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்'' - ''பக்தி வலையிற் படுவோன் காண்க.''

இன்றைய நிலை என்ன? எங்கும் ''நான், நான்'' என்ற அகங்காரம். தம்மைச் சமயத் தலைவர்கள் என்று காட்டிக் கொள்பவர்கள்-தாம் சமயத் தலைவர்களாகக் கணிக்கப்பட வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள் - பலரிடமும் இந்தச் செருக்கு - அகங்காரம் - உச்சநிலையில். விபரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

''மாலொடும் மறை ஓதிய நான்முகன் காலொடும் முடி காண்பரிதாயினான்'' ஆன எம்பெருமான் -

தன் வயிற்றுப் பிழைப்புக்காக வேட்டையாடுகின்ற-வஞ்சனையும் அகங்காரமுமற்ற - சாதாரண வேடன் பறித்துப் போட்ட வில்வ தளத்தினால் மகிழ்ந்து காட்சி கொடுத்த எம்பெருமான் -

பொக்கமிக்க இந்த அகங்கார நாயகர்களைக் கண்டு நக்கு நிற்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



"மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே"

— சுந்தரர்

# கேதீசநாத ஸுப்ரபாதம் [8]

— வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் —

### மங்களம்

*முதலாவது சுலோகம்:*

நமஸ்தே ஸாம்பருத்ராய நமஸ்தே பரமாத்மனே/
க்ஷீர வாபீ தடாவாஸி கேதீசாய ச மங்களம்//

தமிழ் மொழிபெயர்ப்பு:

அம்மையப்பருக்கு வணக்கம்; பரமான்ம சொரூபிக்கு வணக்கம்; பாலாவியின் கரைமேல் உறையும் கேதீசப் பெருமானுக்கு மங்களம்.

*இரண்டாவது சுலோகம்:*

ஆதிமத்யாந்த சூன்யாய ஸர்வாதாரஸ்திதாய ச/
க்ஷீரவாபீ தடாவாஸி கேதீசாய ச மங்களம்//

தமிழ் மொழிபெயர்ப்பு:

ஆதியும் அந்தமும் நடுவும் இல்லாத பெருமானுக்கு வணக்கம்; யாவற்றுக்கும் ஆதாரமாக விளங்கும் பெருமானுக்கு வணக்கம்; பாலாவியின் கரைமேல் உறையும் கேதீசப்பெருமானுக்கு மங்களம்.

*மூன்றாவது சுலோகம்:*

ப்ரம்ம விஷ்ணுஸ்வரூபாய ஸர்கபாலனஹேதவே/
க்ஷீரவாபீ தடாவாஸி கேதீசாய ச மங்களம்//

தமிழ் மொழிபெயர்ப்பு:

படைப்புக்கும் பாதுகாப்புக்கும் காரணமாக அயன் மால் வடிவம் தாங்கிய பெருமானுக்கு வணக்கம்; பாலாவியின் கரைமேல் உறையும் கேதீசப் பெருமானுக்கு மங்களம்.

*நான்காவது சுலோகம்:*

உமார்ததேஹரூபாய காருண்ய ரஸஸிந்தவே/
க்ஷீர வாபீ தடாவாஸி கேதீசாய ச மங்களம்//

தமிழ் மொழிபெயர்ப்பு:

உமைபாகனுக்கு வணக்கம்; கருணைக் கடலுக்கு வணக்கம்; பாலாவியின் கரைமேல் உறையும் கேதீசப் பெருமானுக்கு மங்களம்.

*ஐந்தாவது சுலோகம்:*

நமஸ் ஸுந்தரரூபாய ஸுந்தரீ ப்ராண நாயக/
க்ஷீரவாபீ தடா வாஸி கேதீசாய ச மங்களம்//

தமிழ் மொழிபெயர்ப்பு:

சுந்தர வடிவனுக்கு வணக்கம்; சுந்தரி தலைவனுக்கு வணக்கம்; பாலாவியின் கரைமேல் உறையும் கேதீசப் பெருமானுக்கு மங்களம்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்த வெள்ளம்

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

''அகண்டாகார சிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ''

என்று அந்த சிவானந்த வெள்ளத்தை தாயுமானவர் மிக அழகாக விளக்குகிறார்.

பரந்த உருக்கொண்ட - எல்லையற்ற - வெள்ளம். சிவனை அனுபவிக்கும் - அந்தப் பரம்பொருளில் திளைத்து அனுபவிக்கும் மிகப்பெரும் இன்பமாகிய வெள்ளம். அந்த வெள்ளம் பொங்கித் ததும்பி முழுமையாக ஒரே உருவாகக் கிடக்கிறது. அந்தப் பேரானந்தம் அனுபவித்து உணரப்பட வேண்டியது. அதை இப்படிக் கூறியும் முழுமையாக விளக்கமுடியாததால் ஏற்பட்ட உணர்வில் ''ஐயோ'' என்றவொரு சொல் மூலம் அந்த ஆனந்த அனுபவத்தையும் அதை விளக்க முடியாது தவிக்கும் தன் ஆதங்கத்தையும் ஒரு சேர உணர்த்துகிறார் தாயுமானவர். அதுமட்டுமல்ல. ''இந்த உடல் விழுமுன் அதைப் புசிப்பதற்கு சேரவாரும் செகத்தீரே'' என உலகத்தவர் அனைவரையும் அந்த ஆனந்தத்தை அனுபவிக்க அழைக்கிறார்.

மாயை வயப்பட்டு அதிற் கட்டுண்டு கிடக்கும் நாம் மண், பொன், பெண், பதவி, பட்டம், புகழ் என எத்தனை உருவங்களைக் காட்டும் மாய இன்பங்களை அவாவி ''ஐயோ அது கிடைக்காதா?'' என ஏங்குகின்றோம். இவை எத்தனை காலம் நிலைக்கும்? பேரானந்தம் முழுமையாய்க் கிடக்குதையோ!'' என்று எம் ஆன்மா ஆவல் கொள்ள வேண்டும்.

''திரை பொரா மன்னும் அமுதத் தெண்கடலே''

என்றும்

''ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே''

என்றும் மாணிக்கவாசக சுவாமிகளும் அமுதக் கடலாகவும் ஆனந்தக் கடலாகவும் பரம்பொருளைக் காண்கின்றார்.

''இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குரவ
மின்பகன மாதலினா லில்''

என திருவருட்பயன் கூறுகிறது. பரம்பொருள் தன்னை அடைபவருக்கு இன்பத்தைக் கொடுக்கின்றான். அவன் இன்பமே உருவானவன். அதனால் அவனுக்கு இன்ப நிலை ஏற்படாது என்பது அதன் பொருளாகும். இங்கும் இறைவன் இன்பமயமானவனாகக் கூறப்படுகின்றான்.

அந்த இன்பமயமானவனை, அமுதக்கடலை சிவானந்த வெள்ளத்தை, நாமும் எம் மனத்தில் தேக்கி அனுபவிப்போமானால் பாவம் போய் துன்பங்கள் பறந்தோடி ஆனந்தம் மட்டுமே நம்முள் நிறைந்து மனம் முழுவதும் சாந்தி நிலவும்.

# சைவநெறி - ஆண்டு 13
# மீட்டற் பயிற்சி வினாக்கள்

01. தமிழ்ப்புராண வரிசையிலே சிறப்புக்குரிய மூன்று புராணங்களையும், அவற்றின் ஆசிரியர்களையும் குறிப்பிடுக.
02. வேதாங்கங்கள் எவை?
03. தர்ம சாஸ்திரங்களைச் செய்தோரின் மூவர் பெயரைக் குறிப்பிடுக.
04. புராணத்தின் பஞ்சலக்கணங்கள் எவை?
05. புராணம் என்ற சொல்லின் பொருள் யாது?
06. முதலாழ்வார்கள் எனப் போற்றப்படுபவர்கள் யாவர்?
07. சைவ சித்தாந்தக் கருத்துக்களை இருப்பிடமாகக் கொண்ட உபநிடதத்தின் பெயரைத் தருக.
08. சிவலிங்க வழிபாட்டால் முத்தியடைந்த நாயன்மார்களின் தொகை என்ன?
09. குருவழிபாடு செய்து முத்தியடைந்த நாயன்மார்களுள் மூவரின் பெயரைக் குறிப்பிடுக.
10. ஆகுதிகள் இட்டு ஆற்றப்படும் யாகங்கள் பற்றிக் கூறும் வேதம் யாது?
11. பதினோராந் திருமுறையில் எத்தனை மெய்யடியார்களின் பாடல்கள் அடங்கியுள்ளன?
12. ஆலயத்தில் உள்ள நந்தி எதனைக் குறிக்கிறது?
13. இலிங்காயதம் என்ற சொல்லின் மறுபெயர் என்ன?
14. பஞ்ச கௌவியங்கள் எவை?
15. சக்தியும் சிவமும் அத்துவிதமாய்க் கலந்திருக்கும் தன்மையை எந்தத் திருவுருவத்தில் காணலாம்?
16. மாண்டூக்க காரிகையை எழுதியவர் யார்?
17. விஷ்ணு என்னும் சொல்லின் பொருள் யாது?
18. குருலிங்க சங்கமம் என்ற தொடரில் சங்கமம் என்பது எதனைக் குறிக்கும்?
19. ''தீட்சை'' என்ற சொல்லின் பொருள் யாது?
20. ''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்'' என்று கூறியவர் யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதீசநாத ஸுப்ரபாதம் [8]

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*ஆறாவது சுலோகம்:*

நமஸ்தே ஜகதாதார நமஸ்த்ரை லோக்யபாலன/
க்ஷீர வாபி தடாவாஸி கேதீசாய ச மங்களம்//

தமிழ் மொழிபெயர்ப்பு:

மூவுலகிற்கும் ஆதரமாய் விளங்கும் பெருமானுக்கு வணக்கம்; மூவுலகத்தையும் காத்தருளும் பெருமானுக்கு வணக்கம்; பாலாவியின் கரைமேல் உறையும் கேதீசப் பெருமானுக்கு மங்களம்.

*ஏழாவது சுலோகம்:*

நமஸ்தே வேத வேத்யாய வேத மந்த்ரஸ்வரூபிணே/
க்ஷீரவாபி தடாவாஸி கேதீ சாய ச மங்களம்//

தமிழ் மொழிபெயர்ப்பு:

வேத மந்திரங்களால் அறியப்படுபவனுக்கு வணக்கம்; வேதமந்திர வடிவனுக்கு வணக்கம்; பாலாவியின் கரைமேல் உறையும் கேதீசப் பெருமானுக்கு மங்களம்:

*எட்டாவது சுலோகம்:*

நமோஜ்யோதிஸ் ஸ்வரூபாய லிங்கரூப தராய ச/
க்ஷீர வாபி தடாவாஸி கேதீ சாய ச மங்களம்//

தமிழ் மொழிபெயர்ப்பு:

சோதிவடிவம் தாங்கியவனுக்கு வணக்கம்; பின் இலிங்க வடிவமானவனுக்கு வணக்கம்; பாலாவியின் கரைமேல் உறையும் கேதீசப் பெருமானுக்கு மங்களம்.

**ஆசிரியர் குறிப்பு:** இறைவழிபாட்டின் மூன்று நிலைகள் பற்றி புரட்டாதி மாத இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

1. இறைவனை ஆன்மா உணரும் நிலை ஸுப்ரபாதம்
2. இறைவனைத் தஞ்சமென அடையும் ஆத்ம சமர்ப்பண நிலை (ப்ரநிபத்தி)
3. ஆத்ம சமர்ப்பணத்தின் பயனாக விளைகின்ற பேரின்பநிலை (மங்களம்)

மேலே பிரசுரமாகியிருக்கும் ''கேதீசப் பெருமானுக்கு மங்களம்'' என முடிவடையும் மங்கள ஸ்தோத்திரங்களுடன் இத்தொடர் முடிவு பெறுகிறது. சிவன் என்றாலே மங்களம் என்று பொருள். சிவனுக்குகந்த மகாசிவராத்திரி காலத்தில் மங்களச் சுலோகங்களுடன் இத்தொடர் முடிவடைவது மிக மிகப் பொருத்தமானதே. சோதி சொரூபனுக்கு மங்களம்.

உ

## சைவசமயப் பெருநாள்கள்

### (மாசிப் பூரணை முதல் பங்குனிப் பூரணை வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | 07 உ | (19-02-2000) | சனி | பூரணை விரதம், மாசி மகம் |
| | 09 உ | (21-02-2000) | திங்கள் | திருவள்ளுவர் குருபூசை |
| | 11 உ | (23-02-2000) | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 20 உ | (03-03-2000) | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| | 21 உ | (04-03-2000) | சனி | மகாசிவராத்திரி விரதம் |
| | 22 உ | (05-03-2000) | ஞாயிறு | அமாவாசை விரதம் |
| | 26 உ | (09-03-2000) | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| | 28 உ | (11-03-2000) | சனி | ஷஷ்டி விரதம், கார்த்திகை விரதம் |
| | 30 உ | (13-03-2000) | திங்கள் | கச்சியப்பசிவாசாரியார் குருபூசை |
| பங்குனி | 01 உ | (14-03-2000) | செவ்வாய் | மாதப் பிறப்பு |
| | 04 உ | (17-03-2000) | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| | 06 உ | (19-03-2000) | ஞாயிறு | பூரணை விரதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு காலத்தில் இலங்கையெங்கும் சைவத் தொண்டு புரிந்து வணிகம் செய்துவந்த நகரத்தார் என வழங்கிய செட்டிப்பிள்ளைகள், தாங்கள் தென்னிலங்கையில் காலி நகரிற் செய்த கைங்கரியங்களில் ஒன்றாய சைவப் பிரசாரத்துக்குத் தக்க பெரும் தலைவரை அழைத்துப்போக விரும்பி நாவலர் பரம்பரையினரான வித்துவசிரோமணி அவர்களை வரும்படி கேட்டார்கள். அவர் தமக்கு உடல் நலமில்லையெனக் கூறித் தம் மாணாக்கனை அனுப்பினார்.

காலி முதலான நகரங்களில் சுவாமிநாத பண்டிதர் செய்த சைவப்பிரசங்கங்களின் தரத்தை வெகுவாக வியந்த செட்டிமார், அச்செய்தியைத் தமிழ்நாட்டில் தம்மவருக்கு எழுதி இவரன்றோ இன்றைய யுகபுருடர் எனக் குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து சுவாமிநாத பண்டிதருக்கு உருக்கமான அழைப்பு வந்தது. தாங்கள் எதுவிதத்திலும் வந்தே திரவேண்டும் என அவர்கள் எழுதியதோடு இங்கே நகரத்தில் வாழ்ந்த செட்டிமார்களும் போய்த்தானாக வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். இது சிவன் செயல் எனவுணர்ந்த பண்டிதர் சென்றார்.

பொன்போன்ற மேனியும், மலர்ந்த முகமும், சிவந்த வாயும், குளிர்ந்த கண்களும், பரந்த நெற்றியும், உரத்த குரலும், கனிந்த மொழியும், பழுத்த பண்பாடும் அமைந்த பண்டிதர் அவர்கள், ஓரூரோ, ஒரு தலமோ, ஒரு நகரோ, ஒரு சங்கம்தானோ! இல்லை இல்லை, தென்னாட்டுத் தேயமெங்கும் திவ்வியம் பழுத்த செந்தமிழ் மாரி பெய்து மக்களின் சிந்தையெல்லாம் சைவம் தேங்கிநிற்கப் பிரசங்க மாரி பெய்தார்.

இதுவன்றோ நாம் செய்த சேவையின் சிகரம் என்று செட்டிமார் குதூகலித்து வெள்ளித்தட்டத்தில் பன்னீராயிரம் வெண்பொற் காசுகளை நிரப்பி இருகைகளாலும் நீட்டினார்கள். இதற்காகவோ என்னை அழைத்தீர்கள் என்ற பிறவிச் செல்வனாய பண்டிதர் அவர்கள் மொழி கேட்டுச் செட்டிமார் சிந்தை நொந்து, அப்படியானால் தாங்கள் ஏதாவது சைவநற்கருமத்துக்குப் பயன்படுத்தலாந்தானே என்று குறிப்பாயுணர்த்தினார்கள். ''ஆகா நன்று, நனி நன்று, நானிதை ஏற்கிறேன்'' என்று அன்புடன் ஏற்றவகையில் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் எழுந்தன. திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய வித்தியாசாலை, மேலையூர் அறுபத்துமூவர் வித்தியாசாலை என்றெல்லாம் எத்திசையும் புகழ் மணக்க அவை கல்விப் பணி செய்வனவாயின.

இத்தகைய பரோபகாரியின் பண்பாட்டைக் கண்டுருகிய தனவந்தராய வைசியப் பெருமக்கள், இவர் தன்னலங் கருதாத தமிழனாயிருக்கின்றாரே என மகிழ்ந்து விலையுயர்ந்த பட்டுவேட்டி சால்வையும் தங்கத்தால் செய்த எழுத்தாணியும் கொடுக்க முனைந்தபோது, என்னை இரவலன் என்றா கருதினீர்கள் என்று இவர் இதமாகப் பேசி மறுக்க, அவர்கள் எங்களைப் பரீட்சிக்காதீர்கள் என்று எதிர்வணங்க, இவர் அவற்றை ஏற்று, இவை என் குருநாதனுக்குரியனவாகுக என்று அர்ப்பணஞ் செய்து வித்துவசிரோமணி அவர்களிடம் ஒப்படைத்தார்.

முன்னமே தங்கசாலைத் தெருவில் நாவலர் அவர்கள் வித்தியானுபாலன அச்சகம் நிறுவிய வழியில், இவர் சைவ வித்தியானுபாலன அச்சகம் நிறுவித் தம் சொத்துக்களை முதலீடு செய்து, நாவலர் அவர்களின் நூல்களையும் தாம் அரிதில் எழுதிய நூல்களையும் தரமான முறையில் அச்சிட்டு அடக்க விலையில் விநியோகஞ் செய்து வந்தார்.

அவர் வெளியிட்ட ஒவ்வொரு நூலைப்பற்றியும் அவர் செய்த ஒவ்வொரு பணியைப் பற்றியும் தனித்தனி அத்தியாயங்கள் எழுதவேண்டிய அமைவில் அவரைப் பற்றிச் சுருக்கமாக எழுதிக்கொள்வது இயலாது. 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தரும சிந்தனை' என்னும் பத்திரிகையை வெளியிட்டு, நாவலர் அவர்களின் நற்றொண்டின் திறனை வித்தியாபிமானிகளுக்கு நன்கு விளங்கவைத்தார். சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தார் ஆண்டுதோறும் திருத்தலங்களிற் கொண்டாடிய பெருவிழாக்களில் 1918 ஆம் ஆண்டில் கும்பகோண விழாவில் தலைமை தாங்கினார்.

(தொடரும்)

# சைவநெறி - ஆண்டு 13
# மீட்டற் பயிற்சி விடைகள்

01. பெரிய புராணம் - சேக்கிழார் சுவாமிகள்
கந்த புராணம் - கச்சியப்பச் சிவாச்சாரியர்
திருவிளையாடற் புராணம் - பரஞ்சோதி முனிவர்
02. தீட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி
03. பராசர், கௌதமர், இயமன்
04. அ) உலகத் தோற்றம் ஆ) ஒழுக்கம்
இ) பாரம்பரியங்கள் ஈ) மனுவின் காலங்கள்
உ) பாரம்பரியக் கதைகள்
05. புராணம் என்னும் சொற்குப் பழைமையான வரலாறு என்பதே பொருளாகும்
06. அ) பொய்கையாழ்வர் இ) பூதந்தாழ்வார்
ஆ) பேயாழ்வார்
07. சுவேதாஸ்வர உபநிடதம்
08. இருபத்தொருவர்.
09. அ) திருமூலர் ஆ) அப்பூதியடிகள்
இ) குலச்சிறையார்
10. யசுர் வேதம்
11. பன்னிருவரின் பாடல்கள்
12. பக்குவான்மாவைக் குறிக்கின்றது
13. வீரசைவம்
14. பால், தயிர், நெய், கோசலம், கோமயம்
15. சிவலிங்கத் திருமேனியில் காணலாம்.
16. கௌடபாதர்
17. எங்கும் நிறைந்தவர்
18. அடியார் கூட்டத்தைக் குறிக்கும்
19. ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது என்பதாகும்.
20. உமாபதி சிவாசாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் பகுதி

# மகா சிவராத்திரி

**அன்பார்ந்த குழந்தைகளே,**

வணக்கம். முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானுக்குரிய விரதங்களுள் மிக விசேடமானது மகாசிவராத்திரி விரதம். மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசித் திதி அமையும் இரவே மகாசிவராத்திரி. சைவசமயிகள் அனைவராலும் அனுட்டிக்கப்பட வேண்டிய விரதம் இது. இந்நாளில் உபவாசம் இருப்பதுடன் இரவு முழுவதும் நித்திரை விழித்திருந்து சிவவழிபாட்டில் ஈடுபடவேண்டும்.

சிவாலயங்களில் நான்கு சாமப் பூசைகள் நடைபெறும். முதற் சாமம் மாலை 6.30 மணி முதல் 9.30 மணிவரை; இரண்டாம் சாமம் 9.30 மணி முதல் 12.30 மணி வரை; மூன்றாம் சாமம் 12.30 மணி முதல் 3.30 மணி வரை; நான்காம் சாமம் 3 மணி முதல் 6 மணி வரையாகும். இரவு 12 மணிமுதல் 12.45 வரையில் உள்ள காலம் இலிங்கோற்பவ காலம் எனப்படும். எங்கும் நிறைந்த சோதி சொரூபமான உருவமற்ற (அருவமான) பரம் பொருள், அருவுருவமான இலிங்க வடிவிலும் அந்த இலிங்கத்துக்குள்ளேயே உருவமாக இனிமையான தெய்வீக வடிவிலும் காட்சிதரும் ஆனந்தமான மூர்த்தமே இலிங்கோற்பவ மூர்த்தி. (இலிங்கோற்பவ மூர்த்தியின் அமைப்பு மேலும் விளக்கமாக எட்டாம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது) பரம் பொருள் இலிங்கோற்பவராகத் தோன்றிய காலமே இலிங்கோற்பவ காலம்.

அகந்தை கொண்ட விஷ்ணுவும் பிரமாவும் அடிமுடி தேடிய புராணக்கதையைப் படித்திருப்பீர்கள். இக்கதையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் உயர்ந்த தத்துவம், 'நான்' என்ற கர்வம் - அகங்காரம் - இருக்கும் வரை இறைவனைக் காணமுடியாது என்பதாகும். ஆகவே நாம் ஒரு போதும் எதிலும் கர்வம் கொள்ளாது அடக்கமாக - மற்றவர்கள் கூறுவதைக் கேட்டு ஆராய்ந்து சரியானதை ஏற்றுக் கொள்ளும் பண்பை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இக்கதை எமக்கு இன்னுமொரு விடயத்தையும் கற்றுத் தருகிறது விஷ்ணு இலக்குமி நாயகனாகையால் அவரது கர்வம் செல்வச் செருக்கையும் பிரம்மா சரஸ்வதி நாயகனாகையால் அவரது கர்வம் கல்விச் செருக்கையும் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆகவே செல்வச் செருக்கினாலோ கல்விச் செருக்கினாலோ இறைவனை அறிய முடியாது. அருளோடு கூடிய செல்வமும், அருளோடு கூடிய கல்வியுமே இறைவனை அடைய உதவும். ''அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை'' என்பது வள்ளுவர் வாக்கு.

மகிமை மிக்க சிவராத்திரி தினத்தை ஆலய வழிபாடு, சமயச் சொற் பொழிவுகளைக் கேட்டல், திருமுறை பாராயண — புராணபடன நிகழ்ச்சிகளில் பங்குபற்றல், சிவ நாம ஜபம் முதலியவற்றில் ஈடுபட்டு சிவசிந்தனையோடு கழித்தல் வேண்டும். முழு இரவையும் கோவில்களிலோ சமய நிகழ்வுகள் நடைபெறும் இடங்களிலோ கழிக்க முடியாதவர்கள் வீட்டில் இருந்த வண்ணம் சிவநாம — திருமுறைப் பாராயணத்திலும் சிவசிந்தனையை ஏற்படுத்தும் நூல்களை வாசிப்பதிலும் திருமுறைப்பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்களைக் கேட்பதிலும் செலவழிக்கலாம். நித்திரைவிழித்துச் சினிமாப் படங்கள் பார்ப்பதும் கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்பற்றுவதும் குளிக்கப் போய் சேறு பூசுவது போன்றது.

இரவு முழுவதும் விழித்திருக்க முடியாதவர்கள் இலிங்கோற்பவ காலம் முடியும் வரை - அதாவது இரவு 12-45 வரை (இலங்கை நேரம்) - விழித்திருந்து விழித்திருக்கும் நேரத்தை மேற்கூறியவாறு சிவசிந்தனையோடு கழித்துவிட்டு சிவசிந்தனையோடு நித்திரைக்குச் செல்லல் வேண்டும்.

# மகா சிவராத்திரி விரதம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களவு அடியார்கள் கொழும்பு, மலையகம், கிழக்கு மாகாணத்திலிருந்து செல்லக்கூடியதாயுள்ளது.

திருக்கேதீச்சர ஆலயத்தின் சேதத்துக்குள்ளான ஆலய மண்டபங்களையும் மடங்களையும் புனரமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் எண்பது வீதமான வேலைகள் முடிவடைந்து விட்டதாகவும் அறிகிறோம். கோபுரத்திற்கு வர்ணம் பூசும் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் அநேகமாகச் சித்திரை அல்லது வைகாசி மாத மளவில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆலயச் சுற்றாடலில் மீண்டும் பொதுமக்கள் குடியமர அநுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

திருக்கேதீச்சரத்தின் அன்றைய - இன்றைய நிலைகளைச் சுட்டிக்காட்டி-

இராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் திருக்கேதீச்சரத்திற்குச் சைவர்கள் சென்று தங்கியிருந்து பூசை, தொண்டு, வழிபாடுகள் செய்ய எதுவித தடங்கலும் கட்டுப்பாடும் இருக்கக் கூடாது எனவும் —

ஆலயம் விரைவாகப் புனரமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையும் இதர சைவ ஸ்தாபனங்களும் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் எனவும் —

இதுபற்றிச் சைவ மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் —

வலியுறுத்திக் கடந்த வைகாசி மாத இதழில் இந்து சாதனம் ஆசிரியத் தலையங்கம் தீட்டியிருந்தான்.

திருக்கேதீச்சர நினைவை எம்மனங்களில் பசுமையாக வைத்திருக்க ஒவ்வொரு இதழிலும் திருக்கேதீஸ்வரம் பற்றி யாதாயினும் ஒரு விடயம் பிரசுரிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்துக் கடந்த ஆனி இதழிலிருந்து மங்கல விடிவு காலத்தைத் தேடும் கேதீசநாத சுப்ரபாதப் பாடல்களைத் தொடர்ந்து பிரசுரித்து வந்தோம். அத்தொடர் இவ்விதழில் மங்களத்துடன் (தயவு செய்து பக்கம் 9 ஐப் பார்க்கவும்) முடிவடையும் சந்தர்ப்பத்தில் திருக்கேதீச்சரத்தில் இருந்து மங்கலச் செய்திகள் வந்து கொண்டிருப்பது இந்து சாதன நேயர்களுக்கு மனநிறைவைத் தரும். மகா கும்பாபிஷேகம் விரைவில் நடைபெறத் தொடர்ந்து மனமுருகிப் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசௌச விளக்கம்

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைப்பேற்றில் பெண் பிறந்தால் 40 நாளும் ஆண் பிறந்தால் 30 நாளும் பிதாமாதா இருவருக்கும் தொடக்கு.

முதல் ஆறு மாதத்துள் சிசு அழிதலில் தந்தை முழுகத் தொடக்குப்போம்.

தொடக்குக்காக்கும் உறவினர் (ஞாதிகள்) 5 ஆம் மாத நிகழ்விலிருந்து முழுகி ஆசௌசத்தைப் போக்கலாம்.

பூரணகருச் சிதைவிலும், பிள்ளை பிறந்தவுடன் இறந்தாலும், தந்தை 10 நாள் தொடக்குக் காக்க வேண்டும்.

10 நாட்களுள் குழந்தை இறந்தால் மரணத்தொடக்குக் கொள்ளத் தேவையில்லை.

இயற்கையான பிறப்பில் 30 நாள் தொடக்குக் காப்பது வழக்கம். (தாய்க்கு 40 நாள் என்ற முறையில் குழந்தையைக் கோவிலுக்கு 40 ஆம் நாள் கொண்டு போகும் வழக்கம் இருந்துவருகிறது.)

சைவக்குரு (ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்) ஆசௌச நிகழ்வில் உடன் சுத்தியாகிறார்.

தீட்சை பெற்ற சைவசமயத்தவருள் நியமங்களில் வழுவாது சந்தியாவந்தனம் செய்வோர் 25 நாளும், ஒழுங்காகக் கோயில் தொண்டு செய்வோர் 20 நாளும் தொடக்குக் காக்க வேண்டும்.

பிரமசாரிக்குத் தொடக்கில்லை என்பது குருகுலத்தில் வசித்து ஞான நூல்களைக்கற்றலில் காலம் கழிப்பவர்க்கே பொருந்தும். உறவினருடன் வசிக்கும் பிரமசாரி அர்ச்சகர் இவ்விதியில் அடைக்கலம் புகமுடியாது.

மூன்றாம் தீட்சையாகிய நிர்வாண தீட்சை பெற்றுச் சிவபூசை தவறாது செய்கிறவருக்கு மூன்றுநாள் தொடக்கு.

கோவில்களில் ஓதுவார்களாகப் பணிபுரிவோர் 15 நாளும், ஆடல், பாடல், வாத்திய வழிபாடு செய்வோர் 14 நாளும் காக்க வேண்டும்.

## இறப்பு

மரண ஆசௌசமே பிரதானமாகப் பேணப்படுவது நம் நாட்டு வழக்கம். அதனால் இப்பகுதி விரிவாக எழுதப்படுகிறது. குழந்தை பிறந்து பெயர் இடுவதற்கு முன் ஒரு மாதத்தினுள் இறந்தால் உடன் சுத்தியாம், பல் முளைக்குமுன் (6 மாதத்துள்) ஆயின், ஒரு நாள் தொடக்கு. 11 ம் ஆண்டுக்குப் பின் முழுத்தொடக்கு. பெண்மகவு விவாகம் செய்யுமுன் இறந்தால் பெற்றோருக்கு 3 நாள் தொடக்கு. விவாகம் நிச்சயித்த பெண் மணவிழாவுக்கு முன் இறந்தால் கணவனும் அவன் உறவினரும் 3 நாள் தொடக்குக் காப்பர். பிற ஆத்ம சாந்திக் கிரியைகளும் கணவன் வீட்டாரே செய்ய வேண்டும். ஒருமாதத்தின் பின் இறக்கும் சிசுவைச் சுடலாம்; அன்றி புதைக்கலாம். 11 வயதுக்குப் பின் சுடுவதே நல்லது.

ஆண் மரணித்தால் ஆண்வழியில் ஏழுதலை முறை வரை தொடக்குக்காக்க வேண்டும். குரு சீட தொடர்பு பற்றி 3 நாள் காக்க. தாய்வழிப்பாட்டன், பாட்டி, மாமன், மாமி, மருமகன் மகள் வயிற்றுப்பேரன் ஆகியோருக்கு 8 அல்லது 6 நாள் தொடக்கு.

தானம், வேள்வி விவாகம் போன்ற சற்கருமங்களுக்கு இடையிலும், போர், உள் நாட்டுக்குழப்பம் மலைச்சரிவு, மரம் விழுதல் பூகம்பம் போன்ற பெரும் ஆபத்துக்களின் மத்தியிலும், வரும் தொடக்கு உடனே நீங்கும். ஒரு வரங்கேட்டு அநுட்டிக்கும் உபவாச விரதத்தின் இடையில் தொடக்கு ஏற்பட்டால், தானம் அருச்சனை இரண்டையும் நீக்கி விரதத்தை அநுட்டிக்கலாம். விவாகம் செய்யும் மாப்பிள்ளை, கன்னியைத்தானம் செய்பவர், கோவில் திருவிழாவோ பிரதிட்டையோ செய்யும் ஆசாரியர், செய்விப்பவர் (யஜமானர்) துணைப் பணிகள் செய்வோர் ஆகியவர்களுக்கு உடன் சுத்தியாம். சிராத்தம், யாத்திரை ஆகிய புண்ணிய கருமங்களைச் செய்யும் போது தொடக்குண்டானால் உடன் சுத்தியாம்.

## வீரமரணம்

அரசசேவகர் போரில் இறந்தால் சுற்றத்தாருக்கு உடன் சுத்தி. அவ்விதம் இறந்தவர்களுக்கு அபரக்கிரியையும் உடன் செய்யலாம். (துர்மரணத்திற்போல, குறித்தகாலத்தின் பின் செய்ய வேண்டும் என்றவிதியில்லை).

## துர்மரணம்

இது இருவகை (1) புத்திபூர்வமானது; (2) அபுத்திபூர்வமானது. முதல்வகையில் சாதாரண (மந்திரமின்றி) மரணக்கிரியை (சுடுதல்) செய்யலாம். பின்னர் உரிய காலத்தில் செய்யும்போது, மந்திரத்துடன் கிரியைசெய்யலாம். இதில் சபிண்டருக்குத் தொடக்கு இல்லை. ஸ + பிண்டர் = தென்புலத்தாருக்குப் பிண்டம் இடும் கடன் உள்ள உறவுமுறைக்குள் அடங்குவோர்; தன்னையும் சேர்த்து ஏழுதலை முறை (ஆண்வழியில்). பின்னர் ஆறுமாதம் அல்லது ஒருவருடம் கழித்துக் கிரியை செய்யும் போது ஒருநாள் காக்க வேண்டும். (மூளைப் பிசகினால் தற்கொலை செய்தவருக்கு நீர்க்கடன் செய்து, தொடக்குக் காக்கலாம் என்பர்). இரண்டாவது வகையானதுர்மரணம் இடி, தீ, ஆற்றுப் பெருக்கு, விஷகடி போன்ற திடீர் விபத்துக்களால் நிகழ்வது. இதில் கிரியையும் ஆசௌசமும் கொள்ளலாம்.

## பொருள்கள் சுத்தி

தொடக்கு உடையவர் உபயோகித்த பொருள்கள் குற்றம் உடையன. அவர் தொடக்கு முடியும்போது நீர் தெளித்தல், கழுவுதல் போன்றவற்றால் குற்றம் நீங்கும். தொடக்கு ஆரம்பிக்குமுன் சில நற்கருமங்களுக்கு எனக் குறித்து எடுத்து வைத்த பொருள்களுக்கு குற்றமில்லை. (தானம், பூசை, முதலியவற்றுக்கு உபயோகிக்கலாம். பொன், தானியம், வெல்லம், உப்பு, பால், நெய் முதலியவற்றைத் தொடக்கு வீட்டில் இருந்து பெறலாம்.

## கிராம ஆசௌசம்:

ஓர் ஊரில் பிரேதம் இருக்கும் வரை சகலருக்கும் தொடக்கு இருப்பதால், கோவிற்பூசை முதலியன செய்யக்கூடாது. சிவபூசை, அநுட்டானம், உண்பது. போன்றவையும் விலக்கப்பட்டுள்ளன. பிரேதம் கிராமத்தை விட்டு அகற்றப்பட்ட பின் பிராயச்சித்தம் செய்து கர்ம அனுட்டானங்களைச் செய்யலாம். இது சிற்றூர்களுக்குப் பொருந்தும். பல வீதிகளுள்ள பெரிய ஊர் ஆனால் தூரத்தில் பிரேதம் இருந்தால், ஓர் எல்லைக்கு அப்பால் வசிப்பவர்களுக்குத் தொடக்கு இல்லை. எல்லை கணிக்கும் போது [(பூசைக்குரிய) கைமணி அடிக்

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசௌச விளக்கம்

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஓசை கேட்கும் தூரம் அல்லது] 11 முழம் ஆகிய (விற்) கோல் (நில அளவு) 11 (சுமார் 55 யார்) கொண்ட தூரம் ஆசௌச எல்லையாக எடுத்துக்கொள்ளலாம். அடுத்த வீதியில் பிரேதம் இருந்தாலும் இந்தக் கணிப்பின்படி வரும் இடைவெளிக்குள் தொடக்குக் காக்கலாம். அப்பால் இருந்தால் ஆசௌசம் இல்லை.

கோவிற் பிரதிட்டை முதலிய கிரியைகளுக்கு நடுவில் கிராமத்தில் ஒரு மரணம் நிகழ்ந்தால் இறந்த பிரேதத்தை மயானத்திற் சேர்த்த பின் தொடர்ந்து கிரியை செய்யலாம். பட்டணம், இராசதானி முதலிய பெரு நகர்களில் தொடக்கு இல்லை. பிரேதத்தை தொட்டவர், தூக்கியவர், பின்னே சென்றவர்கள் தொடக்கு உடையர்.

தொடக்கு நாட்கள் வைதிகமுறையில் முத்தீ வளர்க்காதவர்களுக்கு இறந்த நாள்முதல் கணிக்கப்படல் வேண்டும். (சிவபூசையோடு தீ வேட்கும் குருமாருக்குத் தகனம் செய்த நாள் முதல் கணிக்குக). இரவில் பிறப்பு நிகழ்ந்தால் அடுத்துச் சூரியன் உதிக்குமுன் உள்ள நாளே கொள்க. (மேலை நாட்டு முறையில், இரவு 12 மணிக்குப்பின் அடுத்த நாள் எனக் கொள்ளக் கூடாது.)

பிறப்புத் தொடக்குக்கு இடையில் இறப்புவரின், இறப்புக் கணக்கின் பின்னரே தொடக்கு கழியும். இறப்புத் தொடக்குக்கு நடுவில் பிறப்பு வந்தால், மரணத் தொடக்குடன் அது நீங்கும். ஒரு மரணத் தொடக்கு முடியுமுன் மற்றொரு மரணம் வந்தால் பிந்திய தொடக்கு முடிவிலேதான் இரண்டு தொடக்கும் நீங்கும். முந்தியதற்குரிய கிரியைகளும் பிந்தியதன் முடிவிலேயே செய்ய வேண்டும்.

சபிண்டருள் ஒரு தொடக்கு வந்த செய்தி தூர இடத்தில் நிகழ்ந்ததை ஒரு தொடக்குக் கழியும் நாளில் கேட்டால் மேலும் இரண்டு நாள் தொடக்குக் காக்க. அச்செய்தி - உதாரணமாக, அந்நிய தேசத்தில் இறப்பு நிகழ்ந்த செய்தி - மூன்று மாதத்துள் கிடைத்தால் மூன்று இராத்திரி தொடக்குக்காக்க. ஒரு வருஷத்துக்குள் கிடைத்தால் ஒரு நாள் காக்க. ஒருவர் இறந்த செய்தி தொடக்கு எல்லைக்குள் கிடைத்தால் மீதி நாட்கள் மட்டும் கொள்க; உ+ம் அயல்நாட்டில் ஒருவர் இறந்த செய்தி சகோதரருக்கு 20ம் நாள் கிடைத்தால் மீதி 10 நாள் ஆசௌசம் காக்க. தொடக்கு எல்லை கழிந்து ஒருவருடத்துள் பெற்றோரின் மரணத்தைக் கேள்விப்பட்டால் மகன் முழுத் தொடக்குக் காலமும் காக்க வேண்டும். அவர்களுக்கு உரிய கிரியை அங்கு செய்யப்பட்டிருந்தால். 3 நாள் காத்தால் போதும்.

தொடக்கு காலத்தில் சந்தியாவந்தனம் செய்யலாம் (மானஸிகமாயேனும் செய்க). ஞான நூல்களை ஓதுவதைச் சமய தீட்சை பெற்றோர் ஒரு நாள் விலக்கலாம். விசேட தீட்சை பெற்றோர் ஆசௌசத்திலும் சிவ பூஜை செய்யலாம். தாமரை இலையில் நீர் போல் அவர் மனத்தில் தொடக்குப்பற்றாது. பக்தி, வைராக்கியம், ஞானம் இல்லாதோர் அகப்பூசை செய்க. அப்போது குரு அன்றேல் ஒத்ததீட்சையுடையவர் அவருடைய புறப்பூசையைச் செய்யவேண்டும். ஆனால், எத்தகுதி உடையவரும் பரார்த்த பூசை (பர + அர்த்தம் = பிறர் பொருட்டு கோவில் முதலியவற்றில்) செய்யக்கூடாது ஆசௌசம் உடையவர் கோவில் வெளிவீதியில் நின்று வழிபடலாம். உயர் தீட்சை பெற்றோர் மண்டபத்துள் நிற்கலாம். தொடக்குக் காலத்தில் கோவிலுக்குப் பூ எடுத்துக் கொடுக்கக் கூடாது. உருத்திராக்கமாலை தரிக்கக்கூடாது.

## பூப்பு

பெண்கள் முதற்பூப்பு, மாதவிலக்குக் காலத்தில் மூன்று நாள் தொடக்குக்கொள்க. 18 நாட்களுள் மீண்டும் அடையாளம் கண்டால் ஒரு நாள் தொடக்கு. 19 நாளில் ஆயின் 2 நாளும், 20 நாள் ஆயின் 3 நாளும் கொள்க. ஆன்மீக வாழ்வில் நம்பிக்கையுள்ளோர் 3 நாளும் முழுகுதல் செய்யார். இக்காலத்தில் அகப்பூசை வழிபாடு செய்யலாம். அவர்களை அறிந்தோ அறியாமலோ தொடுவோர் முழுகி, உரிய மந்திர ஜபம் செய்து சுத்திபெறுகின்றனர்.

## மயிர் களைதல்

தொடக்கு நீக்கும் போது மயிர்களைதல் அவசியம் என முன்னர் கூறப்பட்டது. சில கிராமங்களில் சவக் கிரியை தொடங்குமுன் மழித்தல் வழக்கமாய் உள்ளது. தொடக்குக் கழியும் தினத்தில் கிரியைகளுக்கு முன் களைதலே சாத்திரசம்மதம். மத்தியானத்துக்குப் பின் மயிர்களைதல் விலக்கப்பட்டுள்ளது. தலைமுதல் மயிர்நீக்கப்படுவதால் முண்டிதம் எனப்படும். மகன் கடமை செய்யமுடியாமல், இன்னொருவர் தீக்கடன் முதலியன செய்தால் அவரும் அதனைச் செய்யலாம்.

உ

## ஸ்ரீ வைத்தீச மகாலிங்கமே

நதியரவு மதியிதழி புரிசடை யவிழ்த்துநட நண்ணுமா காசலிங்கம்
நால்வருக் குக்கலா னிழலினல் லுபதேசம் நவிலுற்ற மவுன லிங்கம்
நிதிபதித னன்புடைத் தோழனா யீசான நிலைநின்ற வேட லிங்கம்
நிவாதமுறை யிருவர்க் கழற்கம்ப வடிவாகி நின்றெழுஞ் சோதிலிங்கம்
துதிதுதிக் கையானை யன்பொடும் போற்றிடும் சுயம்பான வப்பு லிங்கம்
துய்யவுணர் வோரிதய கமலா லயத்திலெழு சுடர்போற் கொழுந்துலிங்கம்
மதிதவழு மதிலோடு கோபுரந் திகழ்வுறும வண்ணையெல்லையி னிறுத்தும்
மாதங்க புரிதையல் பாகமிசை மீதமரும் வைத்தீச மாகலிங்கமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE WAY TO LESSEN THE BURDEN OF GRIEF

HIS HOLINESS

## Sri Chandrasekarendra Saraswathi Paramacharya Swamigal

— Rendered into English from the original Tamil compilation by **Ra. Ganapati entitled** *"Deivattin Kural"* —

We should all try to get the true knowledge about the Supreme Being. What is this knowledge? That is that there is nothing except the Supreme Being. The one that appears as many. If we dwell on the many appearances, all the troubles resulting from anxiety and inequality will continue to occur. If we turn our mind from the many appearances and try to comprehend the one that is the cause for all these, our mind will not falter and troubles will cease. Once we accept there is only one, where is the room for anxiety? In that state we can attain bliss. We call this state gnana.

There seems to be comfort in worldly life too. But it does not last long. How can we make permanent the comfort that we get from outside? What comes from outside may elude us and get away. In this way, what is comfortable at the moment vanishes at the next moment. Comfort peeps in amidst the travails of the world as the sunlight appears and disappears through the foliage in a tree. Realising the basis of the world is eternal bliss.

In worldly life, many troubles are bound to affect all human beings. Others might think that a rich man has no troubles. Thinking like that they may strive to get rich like him. But if we ask the rich man we will be able to know how much trouble he is subjected to. Suppose we are lying on a small elevation, if we fall we may get bruised or have a sprain. The rich man is upstairs, in a higher position. If he falls he will suffer from a fracture. Even his life may be endangered. When a man is rich and comfortable, he is more anxious to see that he does not lose his comforts. That is why we do not find persons who says he / she is happy. Just as a man thinks that he is very intelligent, honest and handsome he also thinks that he is much miserable.

Grief is born with us. We have already sown the seeds for this as a result of our previous karma. There is no escape from this.

But there is a way to be at peace bearing these troubles which are the result of Karma. Gnana which as already indicated is the way not to increase the burden of misery through new Karma.

If one becomes mentally retarded and inanimate there is no trouble. The troubles of a mad man are not deep rooted. But thare is no eternal bliss when one becomes mad. There is no misery in sleep. But we are not aware of being comfortable while in sleep. Only the gnani who is in his wakeful state is always comfortable. Not that his body is not subject to ills. But his mind is without anxiety. The ills outside do not affect his inner being.

When we lift a pot of water from under the water in a well, we do not feel the weight of the pot. But we feel that it is heavy when it rises above the surface of water. Logs of wood which cannot be lifted easily are conveyed through water. Like that we should immerse all our miseries in gnana which is like water. Even then the cause of misery remains. But it will be light like the pot of water under the surface of water.

# HAIL NAMASIVAYA

1. Thou who art non-pareil
   The consort of UmaDevi
   Whose temple is Thy devotee's heart
   Hail Namasivaya.

2. 'Ye art not the body', said he
   And gave me strength divine
   To purge me of my fearful bonds
   Oh Primal One, Namasivaya

3. That Tattvas ninety six are unreal
   I realised through Thy grace
   And transcended their barriers
   Oh Siva, Namasivaya

4. In the void of silence that I may
   Attain peace Thou willeth
   Thou source of Vedas and God of Devas
   Thou sovereign Ruler, Namasivaya.

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Jaffna - Saiva Paripalana Sabai of 450, K. K. S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna. 19-02-2000 (Fullmoon Day)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org